## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| 2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11–ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திருமதி.ஷர்மிளா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | **புவனேஷ்வரி** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**11.09.2025 OS.24/2024 வா.சா.1 ஆஜர்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். எனது தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து பின்பு அதில் நான் கையொப்பம் செய்தேன். பிரமான வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

கடந்த 20.05.2024ம் தேதியிட்ட சர்வே எண்கள் 55/2,46/18 மற்றும் 46/4 தொடர்பான UDR A பதிவேடு RTI நகல் தாக்கல் செய்கிறேன். **<u>அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>**. கடந்த 21.01.2023ம் தேதியிட்ட தவமணியின் இறப்பு சான்றிதழ் இணையதள பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **<u>அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>**. கடந்த 28.01.2023ம் தேதியிட்ட தவமணியின் வாரிசு சான்றிதழ் இணையதள பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **<u>அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** எனது ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். **<u>அது (அசலுடன் ஒப்புமை செய்து) வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** வாதிகளுக்கு ஆதரவாக பிராது படி தீர்ப்பு செய்ய பிரார்த்திக்கிறேன்.

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam